என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் வழங்கும்

நிதி - வணிகம் - முதலீடு

(தனிச் சுற்றுக்கு மட்டும்) மலர் - 1, இதழ் - 3, 1.6.2026 பக்கம்: 20 மின்னிதழ்

கடன்களில் ஒரு EMI-ஐ தாமதப்படுத்துவதால் என்ன ஆகும்?

சேதுராமன் சாத்தப்பன்
Advisor,
NKC Finance Private Limited

கடன் வாங்குவது என்பது தற்காலத்தில் தவிர்க்க முடியாத ஒன்றாகி இருக்கிறது. அப்படி கடன்கள் வாங்கும் போது ஒரு EMI ஐ தாமதப்படுத்துவதால், அது உங்கள் எதிர்காலக் கடன் ஒப்புதல்களையும், நீண்ட காலக் கடன் வாங்கும் திறனையும் பாதிக்க முடியுமா என்றால் ஆமாம் என்பது தான் பதில்.

If I miss EMIs



தாமதப்படுத்தப்பட்ட ஒரே ஒரு EMI கூட உங்கள் financial record களின் ஒரு பகுதியாக மாறி, எதிர்காலக் கடன் வழங்கும் முடிவுகளைப் பாதிக்கக்கூடும். அந்த காலத்தில் சிபில் போன்ற அமைப்புகள் இல்லை. ஆதலால் எங்கு வேண்டுமானாலும் கடன்கள் வாங்கி அதை தாமதமாக கட்டலாம் என்ற நிலை இருந்து வந்தது. தற்போது அப்படி இல்லை.

கடன்கள் பல வாங்குபவர்கள், அடுத்த சில நாட்கள் அல்லது வாரங்களுக்குள் தொகையைச் செலுத்தி விடலாம் என்ற நினைப்பில், அங்கொன்றும் இங்கொன்றுமாக சில EMI-களைத் தாமதப்படுத்துவது அல்லது தவிர்ப்பது பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தாது என்று மனதில் நினைக்கலாம். இருப்பினும், எதிர்காலத்தில் புதிய கடன்களுக்கு விண்ணப்பிக்கும்போது இது விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கடன் வாங்குபவரின் மாத வருமானம் மற்றும் கிரெடிட் ஸ்கோர் தவிர, கடனைத் திருப்பிச் செலுத்தும் பழக்கமும் கடன் கொடுப்பவர்கள் சரிபார்க்கும் மற்றொரு அளவுகோல் என்று ஞாபகம் வைத்து கொள்ள வேண்டும்.

ஒரு கடன் தவணை கட்டாமல் விட்டால் என்ன நடக்கும்?

EMI தாமதங்கள் பொதுவாக கடன் வாங்குபவரின் திருப்பிச் செலுத்தும் வரலாற்றில் பதிவாகும். கடன் வழங்குநர்களும் வங்கிகளும் கடன் செலுத்துதல்கள் தொடர்பான தரவுகளைக் கடன் தகவல் நிறுவனங்களுக்குத் தவறாமல் சமர்ப்பிக்கின்றன.

எனவே, தாமதம் ஏற்பட்டு, கடன் வாங்கியவர் உரிய நாளில் பணம் செலுத்தத் தவறினால், அது கடனாளியின் திருப்பிச் செலுத்தும் வரலாற்றில் பதியக்கூடும்.

கடன் வாங்கியவர் தொகையைத் தாமதமாகச் செலுத்தினாலும், அது தாமதமானது என்ற தகவல் அறிக்கையில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கும். மேலும், எதிர்காலத்தில் அதே கடன் வாங்கியவருக்குப் புதிய கடன்களை மதிப்பிடும்போது, மற்ற கடன் வழங்குநர்களால் இது கவனிக்கப்படும்.

திருப்பிச் செலுத்தும் வரலாறு (repayment history) என்பது கிரிடிட் பைல் பல ஆண்டுகளாக நிலைத்திருக்கும் ஒன்றாகும்.

கடன் வழங்கும் போது, கடன் வழங்குநர்கள் ஏன் திருப்பிச் செலுத்தும் வரலாற்றைக் கருத்தில் கொள்கிறார்கள்?

கடன் விண்ணப்பங்களைப் பொறுத்தவரை, கடன் வாங்கிய தொகையைத் திரும்பப் பெற முடியுமா முடியாதா என்பது குறித்து கடன் கொடுப்பவர்கள் யோசிப்பார்கள். எனவே, கடன் வாங்குபவர்கள் சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்துவதை அவர்கள் உறுதிசெய்ய முயற்சிக்கிறார்கள். இதன் காரணமாக, திருப்பிச் செலுத்தும் வரலாறு ஒரு முக்கிய காரணியாகிறது.

கடன் தவணைகளை சரியாக செலுத்துவது எதிர்காலத்தில் அவர்கள் மற்ற வகை கடன்களுக்கு விண்ணப்பிக்கும் போது அவர்களுக்கு உதவுகிறது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், அடுத்த கடன் வாங்கப் போகும் போது கடன் வாங்குபவர் குறைவான கடன் தொகை, அதிக வட்டி விகிதங்கள் மற்றும் கடுமையான நிபந்தனைகளைப் பெறுவார்.

பல EMI-களைத் தாமதப்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள்

அடிக்கடி ஏற்படும் தாமதங்கள் மற்றும் பல தவணைகள் கட்ட தவறுதல் எதிர்காலக் கடன் வாய்ப்புகள் மற்றும் புதிய கடன்களைப் பெறும் திறனில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

இந்தத் தாமதங்கள், கிரெடிட் கார்டு வாங்குவதையும், எந்த வகையான கடனையும் பெறுவதையும் சாத்தியமற்றதாக ஆக்கக்கூடும்.

கடன் வாங்குபவர் EMI தாமதங்களை எவ்வாறு குறைக்கலாம்?

கடன் வாங்குபவர் மேலும் தாமதங்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க, தானியங்கிப் பணம் செலுத்தும் முறையை அமைக்க வேண்டும்.

NKC Finance Private Limited Board

Dr. E. Gnanam,
Chairman

Thiru. PL. Ramasamy,
Managing Director

Thiru. S.Chidambaram,
Joint Managing Director

Thiru. O. Somasundaram,
Director

Thiru. Sethuraman Sathappan,
Advisor

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
N K C Finance Private Limited

We Listen you Prosper

நம்பகமான, பாதுகாப்பான முதலீட்டுக்கு

எங்கள் கம்பெனியின் 10 சதவிகித வட்டியுடனான பாதுகாப்பான கடன் பத்திரங்கள்

பத்திரத்தின் தன்மை	பாதுகாப்பான கடன் பத்திரங்கள் (secured Non convertible Debentures)
வட்டி விகிதம்	10% p.a. (மூன்று மாதத்திற்கு ஒரு முறை)
குறைந்த பட்ச முதலீட்டு தொகை	ரூ.3,00,000/=
அதிக பட்ச முதலீட்டு தொகை	தலா ஒரு லட்சம் வீதம் ரூ.99 லட்சம் வரை
குறைந்த பட்ச முதலீட்டு காலம்	மூன்று வருடம்
அதிக பட்சம் முதிர்வு தேதி	30-09-2029 மூன்று வருடம் கடந்ததும் பத்திரத்தை மீட்டுக்கொள்ளும் வசதி உண்டு
முதலீட்டு காலத்திற்கு முன் திரும்பப்பெறும் வசதி	குறைந்த பட்சம் ஒரு வருடம் முடிந்திருக்கவேண்டும். ஒரு வருடத்திற்கு பிறகு மூன்று வருடங்களுக்குள் மீட்டுக்கொள்ளும் சமயம் 0.5 வட்டி பிடித்தம் செய்யப்படும்.
வருமான வரி	வருமான வரி சட்டத்தின் வரம்புகளுக்கு உட்பட்டு 10 சதவிகிதம் வரி பிடித்தம் செய்யப்படும். வரிவிலக்கு வேண்டுபவர்கள் தகுந்த விண்ணப்ப படிவம் கொடுத்து விலக்கு பெற்றுக் கொள்ளலாம்.

என் கே சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(RBI Registration No. N-07-00846)

பதிவு அலுவலகம் 25,
எழும்பூர் நெடுஞ்சாலை
எழும்பூர், சென்னை 600 008

Phone Numbers:
92800 85934 & 92800 85935
(Email: nkcfin18@gmail.com)
www.nkcfinance.com

(For Private Circulation only)

என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் இணை நிர்வாக இயக்குநர் திரு. S. சிதம்பரம் அவர்களுடன் பேட்டி

அ. ஹுமாயூன்,
சிதம்பரம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த நகரத்தார் பாரம்பரிய வணிகம் மற்றும் நிதி சேவை செய்யும் சமூகத்தினர் ஆவார். பழங்காலத்தில் இருந்து கடன் வழங்கும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள்.

நூறாண்டுகளுக்கு முன்பே முறையான வங்கிகள் உருவாகும் முன்பே நகரத்தார் தமது மக்களுக்கு கடன் வழங்கி அவர்களின் வியாபாரத்தை விரிவு படுத்த உதவி செய்தவர்கள்.

அந்த வகையில் தோற்றுவிக்கப்பட்ட என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் இணை நிர்வாக இயக்குநர் திரு. S. சிதம்பரம் அவர்களை நமது நிதி–வணிகம்–முதலீடு இதழுக்காக பேட்டி கண்டோம்.

S. சிதம்பரம்

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எப்படி ஏற்பட்டது?

என்பிசியில் 'என்பிசி வாட்ஸ்அப்' குழுமத்தில் நான் உறுப்பினராக இருந்தபொழுது (2017–18) NBC குழு அட்மின்களே ஒரு தொழிலை தொடங்கி முன் உதாரணமாக இருக்கலாம் என்ற கலந்துரையாடல் நடைபெற்றது. NBFC நிறுவனம் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு முடிவு

திரு. S. சிதம்பரம் தம்பதியினர்

எடுத்தபோது அந்த முடிவில் நானும் உடன்பட்டு கருத்து தெரிவித்தேன். அந்த தருணம் தான் இந்த நிறுவனத்திற்கு அடிக்கல் என்று கூறலாம்.

எப்போது இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது?

NBFC ஆரம்பிக்கலாம் என்று ஒரு முடிவு எடுத்த பின்னர் பாரத ரிசர்வ் வங்கி அனுமதி வாங்குவது சம்பந்தமான அலுவல்களை கவனிப்பதற்கு ஒரு குழு 2018ல் அமைக்கப்பட்டு அதில் நானும் (ஒரு வங்கியாளராக இருந்ததாலும், சென்னையில் வசித்து வந்த காரணத்தாலும்) உறுப்பினராக சேர்க்கப்பட்டு 2018 ஏப்ரல் மாதம் ரிசர்வ் வங்கிக்கு மனு சமர்ப்பிக்கப்பட்டு டிசம்பர் மாதம் அனுமதி பெற்று தொடங்கப்பட்டது.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் போர்டில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள்?

இதர இயக்குனர்களுடன், நிதித்துறையில் அனுபவம் பெற்றவர்களும் கண்டிப்பாக இயக்குனர்களாக இருக்க வேண்டும் என்று ரிசர்வ் வங்கி அறிவுரை இருக்கிறது. அதன்படி தொழில் துறையில் முதிர்ந்த அனுபவமும், ஆளுமையும் கொண்ட முத்து ஃபார்மஸி குழுமத்தின்

தலைவர் மேலைசிவபுரி டாக்டர். ஏ. ஞானம் அவர்களின் தலைமையில், மேலைசிவபுரி திரு. பழ.ராமசாமி அவர்கள் நிர்வாக இயக்குனராகவும், பலவான்குடியைச் சேர்ந்த நான் இணை நிர்வாக இயக்குனராகவும், மற்றும் சண்முகநாதபுரம் திரு. ஒ.சோமசுந்தரம் அவர்கள் இயக்குனராகவும் இருந்து வருகிறார்கள். மேலும் உள் நாடு மற்றும் வெளிநாடு வங்கிகளில் முதிர்ந்த அனுபவம் உடைய நெற்குப்பை திரு. சேதுராமன் சாத்தப்பன் அவர்கள் இயக்குனர் குழுமத்துக்கு உறுதுணையாக அட்வைஸர் என்ற முறையில் பல அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள்.

என்ன வகையான கடன்கள் கொடுக்கப்படுகின்றன?

அசையா சொத்து / நகை அடமானம் / ஈடு என்ற முறையில் பொதுவாக கடன்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நிறுவனத்தின் தொழில் அதிகரித்து வருகின்ற நிலையில், தனி நபர் கடன், சொத்து அடமானம் இல்லாத கடன் மற்றும் Micro Finance கம்பெனியை முகவராகக் கொண்டு சுய உதவி குழு கடன் ஆகியவையும், இயக்குனர்களின் முழு அனுமதியுடன் கொடுக்க ஆரம்பித்து இருக்கிறோம்.

இயக்குநர்கள் குழு பற்றிக் கூறுங்களேன்?

தொழில் துறையில் முதிர்ந்த அனுபவமும், ஆளுமையும் கொண்ட முத்து ஃபார்மஸி குழுமத்தின் தலைவர் டாக்டர்.ஏ.ஞானம் அவர்களின் தலைமையில் இயக்குனர்கள் குழு இயங்குவதே ஒரு பலமாக கருதுகிறோம். அதற்கு மேலும் வலிமை சேர்க்கும் வகையில், கடன் வழங்கும் நிதி நிறுவனத்தில் அனுபவம் கொண்ட திரு. பழ.ராமசாமி அவர்களும், இரு சக்கர வாகன நிதி நிறுவனத்தில் அனுபவம் கொண்ட திரு. ஒ.சோமசுந்தரம் அவர்களும் என்னுடன் இருந்து வருவது ஒரு தனி சிறப்பு என்றே சொல்லலாம். திரு. சேதுராமன் சாத்தப்பன் அவர்கள் அமர்வும் மேலும் ஒரு தனி சிறப்பு.

தங்கள் குடும்பம் குறித்து கூறுவீர்களா?

எனக்கு 1979, மே மாதம் மதகுபட்டி சுப.திருஞானம் செட்டியார் அவர்கள் புதல்வி மீனாக்ஷி என்ற வளர்மதி வாழ்க்கைத் துணைவியாக கிடைத்தது ஒரு பாக்கியம். எங்களது இரு கண்கள் போல் ஒரு மகன் பழனியப்பன் VITயில் B.E. முடித்து Cognizant Technology Solu-tions ல் முது நிலை இயக்குனராக இருந்து, தற்பொழுது Myridius

(New Jersy based) என்ற IT Services and IT Consulting companyல் முது நிலை இயக்குனராக பணியில் இருந்து வருகிறார்கள். மருமகள் CIPLA, Reckitt Benckiser Group Pharma company களில் பணிபுரிந்து பின் Kelly School of Business, at Indiana University (USA)ல் MBA முடித்து, New Jersy Amazon நிறுவனத்தில் முது நிலை மேலாளராக பயிற்சி எடுத்துக்கொண்டிருகிறார்கள். ஒரு மகள் வேந்தன்பட்டியில் திரு.ந.ஜெயம்கொண்டான் செட்டியார் அவர்கள் மகன் நடராஜன் அவர்களுக்கு திருமணம் செய்து தற்பொழுது சிங்கப்பூரில் வசித்து வருகிறார்கள்.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சிறப்புகளாக எதை கூறுவீர்கள்?

பங்குதாரர்களுக்கு, நிறுவனம் ஆரம்பித்தது முதல், வருடம் தவறாமல் ஈவுத் தொகையாக (டிவிடெண்ட்) வங்கி வட்டி விகிதத்திற்கும் மேலாக ஒவ்வொரு ஆண்டும் கொடுத்து வருவதும், போனஸ் பங்குகள் வழங்கியதும், கடந்த இரண்டு ஆண்டுகளில் நிறுவனம் கண்ட அசுர வளர்ச்சி என்றே கூறலாம்.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் வெற்றியின் ரகசியமாக எதை கருதுகிறீர்கள்?

கடின உழைப்பும், தன்னம்பிக்கையும், இயக்குனர்களின் ஒத்துழைப்பும், தளராத முயற்சியும் செய்ததால் இந்த வெற்றி எங்களுக்கு கிடைத்தது.

இந்தச் சாதனைக்கு எங்களின் மனமார்ந்த நல்வாழ்த்துகள். மேலும் பல வெற்றிகளை பெற வாழ்த்துகிறோம் என கூறி பரஸ்பர வணக்கங்களை பகிர்ந்து கொண்டு விடைபெற்றோம்.

என்.கே.சி. பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

www.nkcfinance.com

OUR SERVICE :

- 24 Hours Emergency & Trauma Care
- 24 Hours Ambulance Service
- 24 Hours Laboratory
- Air Conditioned Private Rooms
- Air Conditioned General Ward
- Fully equipped ICU
- Maternity Care
- Major Operation Theatres
- X-Ray & Ultrasound
- Multi speciality Consultation
- Physiotheraphy & Rehabilitation
- Dental and Maxillofacial Surgery

WHY CHOOSE US

With 50+ years of trusted healthcare, we're a fully air-conditioned multispeciality hospital offering expert doctors, advanced facilities, and compassionate care—all under one roof.

MUTHU GROUP SINCE 1970

MUTHU HOSPITAL

Perambur

CONTACT US :

+91 7397 310 543
044 7962 0543

336, Paper Mills Road, Perambur

muthuhospitalperambur.com

NKC FINANCE PRIVATE LIMITED
(RBI REGISTRATION No.N-07-00846)

Registered & Corporate Office:
25/55 Egmore High Road, Egmore, Chennai 600008.
Phone Number: 044-26202064
Phone Numbers: 92800 85934, 92800 85935
Ponnamaravathi: 92800 85940
Email: nkcfin18@gmail.com, Website: www.nkcfinance.com

WE EXTEND THE FOLLOWING LOANS:

- Loan against Property at competitive rate of Interest. (Repayment up to 60 months)
- Business Loans (Short Term, Long Term and Line of Credit) against Property
- Instant Loan against Jewellery

» Basic Requirements: Acceptable CIBIL/CRIF Score, proof for Income/ Revenue Generation with 12 months Bank Statements.

» In Principle sanction will be given within 3 working days and regular Sanction will be given within 7 working days.

» Processing Charges, Pre-closing charges are the lowest. No hidden Charges. Simple Documents, quick decisions and Hassle-free procedures.

Quantum:

Rs. 5 Lakhs - Rs. 50 Lakhs

GNANAM.E
Chairman
PH-98843 82828

RAMASAMY.P
Managing Director
PH-92800 85934

CHIDAMBARAM.S
Joint Managing Director
PH-92800 85935

SOMASUNDARAM.O
Director
PH-93631 02923

SETHURAMAN SATHAPPAN
Advisor
PH-98204 51259

Senthoor
RESIDENCY
வீடுகள், அறைகள்
நாள் மற்றும் மாத
வாடகைக்கு விடப்படும்
17/2, Nethaji Road, Behind Mathoor Valagam, Near New Bus Stand,
KARAIKUDI - 630 003
Cell : 9994858735

92800 85940

We Listen You Prosper

என்.கே.சி பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்

(இந்திய ரிசர்வ் வங்கியின் பதிவு பெற்ற வங்கி சாரா நிதி நிறுவனம்)

NKC FINANCE PRIVATE LIMITED

நகை அடமானக் கடன்

தங்க நகைகள் தரம் பார்க்கும் வசதி

Gold, Silver Ornaments Testing Facility

Door No: 2/9B, பஜார் மெயின்ரோடு, INDANE GAS எதிரில்,
பொன்-புதுப்பட்டி - 622 407. பொன்னமராவதி.புதுக்கோட்டை மாவட்டம்.

ELEVATE YOUR WORLD.
Reliable. Efficient. Connected.
We keep you safe:
Built with care.
Fast and smart:
Always ready for you.
Good for the planet:
Saves energy, too.
Here when you need us:
Help is just a call away.
Get Free Quote:
7299012340, 9042967057, 6381361322
MUTHU GROUP
SINCE 1970
MAGNETECH
ELEVATORS PVT.LTD.

தாமதமான ஓய்வூதிய ப்ளான்...
என்ன செய்வது? எப்படி செய்வது?

சேதுராமன் சாத்தப்பன்
Advisor,
NKC Finance Private Limited

நம்மில் நிறைய பேருக்கு ஒரு 40 வயது கடந்தவுடன் தான் ஓய்வுக்கு பின் நிம்மதியாக வாழ எப்படி பணத்தை சேர்ப்பது என்ற நினைப்பு வரும். அப்படி தாமதமாக சிந்திப்பவர்களுக்கு / யோசிப்பவர்களுக்காகத் தான் இந்த கட்டுரை.

ஓய்வூதியத் திட்டமிடலைத் தாமதமாகத் தொடங்குகிறீர்களா? உங்களால் இன்னும் ஒரு நிலையான நிதி எதிர்காலத்தை உருவாக்க முடியும்.

எதிர்பார்த்ததை விடத் தாமதமாக ஓய்வூதியத் திட்டமிடலைத் தொடங்குவது, உங்களால் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்க முடியாது என்று அர்த்தமல்ல.

தாமதமான ஓய்வூதியத் திட்டமிடலுக்கு ஒரு நடைமுறை, சரியான அணுகுமுறை தேவை.

வாழ்க்கை முறை மற்றும் எதிர்கால வாழ்க்கைச் செலவு அதிகரிப்புகளுக்கு ஏற்ப ஓய்வூதியத்தைத் திட்டமிடவேண்டும்.

தாமதமாகத் தொடங்குபவர்களுக்குத் அதிகமான சேமிப்பும், சமச்சீரான முதலீடும் தேவை.

சில சமயங்களில், பலருக்கு தனது நாற்பதுகள் அல்லது ஐம்பதுகளை எட்டிய பின்னரே ஓய்வூதியத் திட்டமிடலைச் செயல்படுத்த முடியும் என்ற நிலை இருக்கும் / இருக்கிறது. இளமைப் பருவத்தில் குடும்ப நிதிகளை நிர்வகித்தல், தொழில் மற்றும் கல்விச் செலவுகள், அல்லது வீட்டுக் கடன் திருப்பிச் செலுத்துதல்கள் ஆகியவை இருக்கும். பல சமயங்களில், வாழ்க்கையின் பிற்காலத்தில் மட்டுமே ஓய்வூதியத்தைப் பற்றி சிந்திக்க முடியும் என்று ஒருவர் உணர்கிறார். ஆனால், காலப்போக்கில் ஒருவரின் நிதி நிலைமை மாறி, ஓய்வூதியத் திட்டமிடல் அவசியமாகிறது.

முதலில் உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதைக் கண்டறியுங்கள்.

ஓய்வூதியத்திற்குத் தயாராவதில் முதல் படி, ஓய்வூதியத் தேவைகளைக் கணக்கிடுவதாகும். பெரும்பாலான தனிநபர்கள், முந்தைய காலகட்டங்களுடன் ஒப்பிடும்போது ஓய்வூதியத்தில் செலவுகள் குறைவாக இருக்கும் என்று நம்புகிறார்கள், ஆனால் அது எப்போதும் உண்மையாக இருப்பதில்லை. அதிகரித்த ஹாஸ்பிட்டல் செலவுகள் மற்றும் பணவீக்கம் ஆகியவை உண்மையில் உங்கள் செலவுகள் உயரக்கூடும் என்பதைக் உணர வேண்டும்.

ஓய்வு காலத்தில் ஒருவருக்கு எவ்வளவு பணம் தேவைப்படும் என்பதைத் துல்லியமாகக் கணக்கிடும்போது, வீட்டு வாடகை, உணவுச் செலவுகள், பயன்பாட்டுச் செலவுகள், காப்பீட்டுத் திட்டங்கள், விடுமுறைத் திட்டங்கள் மற்றும் பிற மருத்துவச் செலவுகள் போன்ற அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். உங்கள் ஓய்வூதிய வரவுசெலவுத் திட்டம் என்னவாக இருக்கும் என்பதைத் தீர்மானிப்பதில் உங்கள் வாழ்க்கை முறை ஒரு

முக்கியப் பங்கு வகிக்கிறது.

ஒரு இலக்கைக் கொண்டிருப்பது ஒரு திசையை உருவாக்குகிறது, ஏனெனில் அது ஓய்வூதியத்திற்காகச் சேமிப்பதில் சீராக இருக்க உதவுகிறது.

தாமதமின்றி அதிகமாகச் சேமிக்கவும்

முதுமையில் ஓய்வூதியத்திற்காகச் சேமிக்கத் தொடங்குவது, நேரம் குறைவாக உள்ளது என்பதைக் குறிக்கிறது. எனவே, ஓய்வூதியத்திற்குள் போதுமான நிதி இருப்பதை உறுதிசெய்ய, ஒருவர் உடனடியாகத் தீவிரமாகச் சேமிக்கத் தொடங்க வேண்டும்.

முதலில், ஒருவர் தனது சராசரி மாதச் செலவுகளைக் கணக்கிட வேண்டும். சில தேவையற்றவையை அல்லது ஆடம்பரப் பொருட்களை நீக்குவது போன்ற செலவுகளில் சிறிய மாற்றங்களைச் செய்வது மிகவும் முக்கியம்.

ஒவ்வொரு மாதமும் சேமிப்பை கட்டாயமாகவும் வழக்கமாகவும் மாற்றுவதால் இலக்கை அடைய எளிதாக இருக்கும்.

ஆரம்ப சேமிப்பு குறைவாக இருந்தாலும், தவறாமல் சேமிப்பது முக்கியம்.

வளர்ச்சியை உருவாக்க முதலீட்டில் கவனம் செலுத்துங்கள்

தாமதமாகத் தங்கள் ஓய்வூதிய சேமிப்பைத் தொடங்கும் நபர்களுக்கு, அவர்களின் சேமிப்பிலிருந்து வளர்ச்சி தேவைப்படுகிறது. குறைந்த

வருமானம் தரும் சேமிப்பில் எல்லாவற்றையும் விட்டு வைப்பது, எதிர்காலத்தில் அவற்றைப் பயன்படுத்துவதற்குப் போதுமான பலனைத் தராமல் போகலாம். ஒருங்கிணைந்த முதலீட்டு உத்தி, ஒருவர் தனது ஓய்வூதிய சேமிப்பு இலக்குகளை அடைய உதவும். உதாரணமாக, பங்குகள் வளர்ச்சியை உருவாக்க உதவும், மற்றும் கடன் பத்திரங்கள் நிலைத்தன்மையைக் கொடுக்கும்.

ஒருவரின் முதலீட்டுத் தேர்வுகள், ரிஸ்க் எடுப்பதில் உள்ள அவரது சௌகரியத்தையும், ஓய்வு பெறுவதற்கு முன் மீதமுள்ள ஆண்டுகளையும் பிரதிபலிக்க வேண்டும்.

முதலீடுகளை அவ்வப்போது சரிபார்ப்பது, அவை தொடர்ந்து விரும்பிய பலன்களைத் தருகின்றனவா என்பதை உறுதி செய்யும். பொறுப்புகளைக் குறைக்க கடன்களைத் திருப்பிச் செலுத்துங்கள் கடன்களைக் குறைப்பது நெகிழ்வுத்தன்மையை அதிகரிக்கும். செலுத்த வேண்டிய பெரிய கடன்கள் இல்லாமல், ஓய்வூதியக் காலத்தில் உங்கள் வருமானம் உங்கள் செலவுகளைப் பூர்த்தி செய்யும்.

நிதி - வணிகம் - முதலீடு

பற்றிய கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நிதி - வணிகம் - முதலீடு மின்னிதழ் “என்.கே.சி., பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்” (NKC Finance Private Limited) நிறுவனத்தின் கீழ் வெளி வருகிறது. தமிழில் வர்த்தக கட்டுரைகள் எழுத ஆர்வம் உள்ளவர்கள் 250 - 300 வார்த்தைகளுக்கு மிகையாகாமல் எங்களுக்கு எழுதி அனுப்பவும்.

NKC FINANCE PRIVATE LIMITED
(RBI REGISTRATION No.N-07-00846)
Registered & Corporate Office:
25/55 Egmore High Road, Egmore, Chennai 600008.
Phone Number: 044-26202064
Phone Numbers: 92800 85934, 92800 85935
Karaikudi : 94426 50312, Ponnamaravathi : 92800 85940
Email: nkcfin18@gmail.com, Website : www.nkcfinance.com
LOAN AGAINST PROPERTY
WE EXTEND THE FOLLOWING SERVICES:
● Loan against Property for Personal needs at competitive rate of Interest. (Repayment upto 60 Months)
● Loans (Short Term, Long Term and Line of Credit) against Property for Business requirements viz. for improving existing business/ commencing new business at competitive rate of Interest (Repayment 12 to 60 Months)
● Loan against Jewellery at competitive rate of Interest
Processing charges and pre-closure charges are the lowest. No hidden charges.
Simple documentation, Quick decisions and Hassle-free procedures.
● Basic Requirements: Acceptable CIBIL/CRIF Score, Income/Revenue generation proof with 12 months Bank SB/Current Account statements.
Quantum:
Rs. 5 Lakhs - Rs. 50 Lakhs
HOW TO CHECK CIBIL SCORE?
Looking for a Loan?
Check your Free CIBIL Score first.
*In principle sanction will be given within 3 working days and regular sanction will be given within 7 working days.
*T & C apply

WITH BEST COMPLIMENTS FROM

NKC FINANCE PRIVATE LIMITED

(Non-Banking Finance Company registered with RBI)

Registered & Corporate Office

No:25/55, Egmore High Road, Chennai 600 008.

Contact No: 92800 85934, 92800 85935

www.nkcfinance.com

Email: nkcfin18@gmail.com

Loan Against Property

★ Simple Documentation & Quick Processing at Competitive Rate of Interest

Quantum: Rs.5 Lakhs-Rs.50 Lakhs

★ Gold Jewel & Silver Vessels

Branches : Ponnamaravathy, Karaikudi, Salem, Coimbatore